**செய்தி வெளியீடு எண்: 626** **நாள்: 18.10.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 17.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், ஒடிசா மாநிலம், ஜஜ்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற 13–வது அகில இந்திய போலீஸ் ரைபிள் மற்றும் ரிவால்வர் / பிஸ்டல் சுடும் போட்டி 2012–ல் (13th All India Police Rifle & Revolver / Pistol Shooting Competition 2012) முதல் இடத்தைப் பெற்று கோப்பையை வென்ற தமிழக காவல்துறையினர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தமிழக காவல்துறையைச் சேர்ந்தவர்கள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் வெற்றி பெற்று வருகிறார்கள். அண்மையில் ஒடிசா மாநிலம், ஜஜ்பூர் மாவட்டத்தில் உள்ள சோலார் சுடு பயிற்சி தளத்தில் 3.10.2012 முதல் 7.10.2012 வரை நடைபெற்ற 13–வது அகில இந்திய போலீஸ் ரைபிள் மற்றும் ரிவால்வர் / பிஸ்டல் சுடும் போட்டி 2012–ல் (13th All India Police Rifle & Revolver / Pistol Shooting Competition 2012) 23 மாநில அணிகள் மற்றும் 8 துணை ராணுவ அணிகள் பங்கேற்றன. இதில் தமிழ்நாடு காவல் துறையிலிருந்து காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் திரு. என். தமிழ்செல்வன், இ.கா.ப. அவர்கள் தலைமையிலான 32 பேர் கொண்ட தமிழக காவல்துறையினர் ஒட்டுமொத்த மாநிலங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் முதல் இடத்தைப் பெற்று கோப்பையை வென்றார்கள்.

மேலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 6ஆம் அணியைச் சேர்ந்த அவில்தார் திரு.ஜெ. ராஜகுரு அவர்கள் கைத்துப்பாக்கி தாக்குதல் (Pistol Attack) போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

13–வது அகில இந்திய போலீஸ் ரைபிள் மற்றும் ரிவால்வர் / பிஸ்டல் சுடும் போட்டியில் வெற்றி பெற்ற தமிழக காவல்துறை அணியினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 17.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இனி வரும் காலங்களிலும் தமிழக காவல்துறையினர் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றிகள் பல பெற வேண்டும் என்று வாழ்த்தி, தனது பாராட்டுதல்களை தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 18.10.2012